யா/ஹாட்லிக் கல்லூரி,பருத்தித்துறை.
# J/ Hartley College, Point Pedro.

## முதலாம் தவணைப் பரீட்சை–2020 – தரம் 11
## First Term Examination – 2020 – Grade 11

| வணிகக்கல்வியும் கணக்கீடும் | 60 | T | II | இரண்டு மணித்தியாலம் 30 நிமிடங்கள் Two Hours 30 minutes |
|---|---|---|---|---|

சுட்டெண் Index No

**வணிகக்கல்வியும் கணக்கீடும்**

### பகுதி – II

01. பின்வரும் சம்பவத்தை பயன்படுத்தி I தொடக்கம் x வரையான வினாக்களுக்கு விடை தருக

கிளிநொச்சி இந்துக் கல்லூரி பாடசாலையில் பாடசாலை அபிவிருத்திச்சங்க கூட்டத்தில் அதிபர் உரையாற்றிய போது பரந்தன் பகுதியிலிருந்து வரும் மாணவர்களுக்கு பேரூந்து சேவை போதாத காரணத்தினால் பாடசாலைக்கு தாமதமாக வருவதாக கூறினார். அப் பாடசாலையின் நலன்விரும்பிகளான ஆனந்தன், மதன், நர்த்தனன் ஆகிய மூவரும் இணைந்து சிறிய பேரூந்தினை கொள்வனவு செய்வதற்கு ஒவ்வொருவரும் தலா 300000 ரூபா இடுவதெனவும் மிகுதி பணத்திற்கு 12% வருட வட்டியில் 200000ரூபா வங்கிக்கடன் பெற்று சிறிய பேரூந்து ஒன்றைக் கொள்வனவு செயது ஹரன் (Travels) எனும் பெயரில் 2019 ஆவணி 01ம் திகதி வணிகமொன்றை தொடங்கினர். இந்தப் பேரூந்து பரந்தன் வழியிலான போக்குவரத்திற்கும் சுற்றுலாப்பயணத்திற்கும் பயன்படுத்தப்படும். பின்வரும் தகவல்கள் 31 ஆவணி 2019 முடிவடைந்த மாதத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள்

<u>பேரூந்து சேவை பெறுவனவுகள்</u>

| | |
|---|---|
| பயணிகளிடமிருந்து | 52000 ரூபா |
| சுற்றுலாப் பயணத்தின் போது | 27000 ரூபா |

<u>செலவுகள்</u>

| | |
|---|---|
| எரிபொருள் செலவு | 12000 ரூபா |
| பழுது பார்த்தல் செலவு (பேரூந்து) | 7000 ரூபா |
| ஓட்டுனருக்கான சம்பளம் | 15000 ரூபா |
| ஏனைய செலவுகள் | 3000 ரூபா |

28 ஆவணி 2019 மூவரும் புதிய சொகுசுப் பேரூந்து ஒன்றைக் கொள்வனவு செய்யத் தீர்மானித்ததுடன் அது தொடர்பான விபரங்களை இணையத்தில் தேடினர். அத்தினமே சுத்திகரிப்பிற்கு என ஊழியர் ஒருவரை பணியில் அமர்த்தினர்.

i. அ. ஹரன் Travels மூலம் பூர்த்தி செய்யப்படும் மனித தேவையை குறிப்பிட்டு அதனை அவ்வணிகம் நிறைவேற்றி வைக்கின்றது எனக்காட்டுக.
   ஆ. கிளிநொச்சி இந்துக்கல்லூரி பாடசாலை அபிவிருத்திச்சங்கமானது உரிமை அடிப்படையில் எத்தகைய வணிக அமைப்பைச்சாரும்?

ii. அ. ஹரன் travels வணிகம் தனது பெயரைப் பதிவு செய்ய வேண்டுமென நர்த்தனன் தெரிவிக்கின்றார். நர்த்தனனின் இக்கூற்றுக்கு இணங்குகின்றீரா?
   ஆ. மேலே (அ) இல் குறிப்பிட்ட விடைக்கான காரணமொன்றைக் குறிப்பிடுக.

iii. இவ்வணிகத்தின் அகச்சூழல் காரணிகள் இரண்டைக்குறிப்பிட்டு ஹரன் travels சம்பவத்தினைக் கருத்தில் கொண்டு அதற்கான உதாரணங்களைத் தருக.

iv. இச்சம்பவத்தில் குறிப்பிட்டுள்ள தொடர்பாடல் ஊடகமொன்றையும் அதனுடன் தொடர்புடைய தொடர்பாடல் முறை ஒன்றையும் தருக.

v. 01.08.2019 இல் ஹரன் travels வணிகத்தின் கணக்கீட்டுச் சமன்பாட்டை பெறுமதிகளுடன் தருக?

vi. இவ்வணிகத்தின் ஓட்டுனருக்கான சம்பளக்கொடுப்பனவின் இரட்டை விளைவைத் தருக.

vii. அ. இச்சம்பவத்தில் குறிப்பிடப்படும் முகாமைத்துவக் கருமமான திட்டமிடலுக்குரிய நடவடிக்கை ஒன்றை தருக?

ஆ. ஹரன் travels வணிகக் கொடுக்கல் வாங்கல்களை பதிவதற்கான மூலஏடு ஒன்றினைத் தருக?

viii. அ. மூல ஆவணங்கள் இரண்டு தருக.

ஆ. மூல ஆவணத்தின் பயன்கள் 2 தருக?

ix. 31.08.2019 இல் ஹரன் travels வணிகத்தின் காசு மீதியைக் கணிக்க.

**வணிகக்கல்வி**

**பகுதி – I**

**இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.**

02.i. அ. நேரில் உற்பத்தி என்றால் என்ன?

ஆ. உற்பத்தி செயற்பாட்டினைத் தருக?

ii. பின்வரும் கூற்றுக்கள் மெய்யா பொய்யா என்பதை குறிப்பிடுக.

அ. கூட்டிணைக்கபட்ட கம்பனிகளின் சாதாரண பங்குகளை கொள்வனவு செய்த எந்தவொரு நபரோ அல்லது நிறுவனமோ அதன் உரிமையாளராவார்.

ஆ. தனியார் துறையில் இலாபநோக்குடைய நிறுவனங்களாக கூட்டுறவு சங்கங்கள் காணப்படுகின்றது.

இ. உற்பத்தி வணிகத்தின் வழங்குனர்கள் அவ்வணிகத்தின் அகச்சூழல் காரணியாக கருதப்படும்.

ஈ. உற்பத்தி காரணிகளில் நிலம் எனப்படுவது எல்லா இயற்கை வளங்களையும் குறிக்கிறது.

iii. நுவரெலியாவில் வசிக்கும் விமல், கமலுடைய உதவியுடன் தனது காணியில் தேயிலை பயிரிட்டு தேசிய சிறகுறிஞ்சா தேயிலை எனும் தனது உற்பத்தியினை நயினா தீவைப்பார்வையிட வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கும் நகரிலுள்ள கடைகளுக்கும் உள்ளூர் நுகர்வோருக்கும் விற்பனை செய்யும் நோக்கில் நடத்தி வருகிறார்.

அ. இச்சம்பவத்தில் தேசிய சிறுகுறிஞ்சா தேயிலை வணிகத்தில் அக்கறையுடைய தரப்பினரான ஊழியர்களுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் ஒவ்வொரு உதாரணம் வீதம் தருக.

ஆ. நீர் மேலே குறிப்பிட்ட iii(அ) வில் அக்கறையுடைய ஒவ்வொரு தரப்பினரையும் அவ்வணிகத்தில் அக்கறை செலுத்துவதற்கான காரணத்தையும் தருக.

iv. வணிகப் பெயர்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

1. சில்வா பற்றிக் உற்பத்தியாளர்
2. சகாரா காளான்
3. பாரதி சாரதி பயிற்சி பாடசாலை
4. சுதன் வைத்தியசாலை

அ. மேற் குறித்த ஒவ்வொரு வணிகத்தாலும் நிறைவேற்றப்படும் மனித தேவைகள் யாது?

ஆ. மேற் குறித்த ஒவ்வொரு வணிகத்தினதும் உற்பத்தியின் தன்மையின் அடிப்படையில் அது உரித்தாகும் வணிக அமைப்பு யாது?

(8 புள்ளிகள்)

03.i. அ. மொத்த வியாபாரம் என்றால் என்ன?
ஆ. மொத்த, சில்லறை வியாபாரங்களுக்கிடையிலான வேறுபாடுகள் இரண்டு தருக?

ii. பின்வரும் கூற்றுக்கள் உண்மையா பொய்யா எனக் குறிப்பிடுக.
அ. காசோலையின் உரிமையை மாற்றுவதற்கும் காசோலையில் புறக்குறிப்பிடுதல் வேண்டும்.
ஆ. தொடர்பாடல் என்பது வெளி நபர்களுக்கும் நிறுவனங்களுக்குமிடையில் மாத்திரம் தகவல்களை பரிமாற்றிக் கொள்ளல் ஆகும்.
இ. உயர் நம்பிக்கை எனும் காப்புறுதி தத்துவம் ஆயுள் காப்புறுதிக்கு மாத்திரமே பொருத்தமானதாகும்.
ஈ. வைப்பினளவை அடிப்படையாகக் கொண்டு வரவட்டையை பயன்படுத்த முடியும்.

iii. பிரியங்கா பற்றித் தயாரிப்பாளர்கள் லண்டனில் உள்ள சாரங்கா என்பவருக்கு ஒரு
அ. தொகை பற்றிக்வடிவமைப்புக்களை விமானம் மூலம் அனுப்பினார். இங்கு குறிப்பிடப்படும் இறக்குமதியாளர் மற்றும் ஏற்றுமதியாளர்களை பெயரிடுக.
ஆ. இதில் உள்ளடங்கியுள்ள போக்குவரத்து முறை தொடர்பில் போக்குவரத்து மூலங்களான வழி மற்றும் ஊடகத்திற்கு உதாரணம் தருக.

iv. கமலன் தனது நண்பனுக்கு சொந்தமான மோட்டார் கார் செலுத்திய போது விபத்துக்குள்ளானது. இது பற்றி தனது கைத்தொலைபேசி மூலம் காப்புறுதி நிறுவனத்திற்கு அறிவித்தார். காப்புறுதி முகவர் வருகை தந்து மதிப்பிட்ட சேதத்திற்குரிய நட்ட ஈட்டை கோரிய போதிலும் காப்புறுதி கம்பனி அதனை செலுத்த மறுத்தது.
அ. கமலனுக்கும் காப்புறுதி இழப்பீடு மறுக்கபப்பட்டமைக்கும் காரணமான காப்புறுதி தத்துவம் யாது?
ஆ. மேற்குறித்த சம்பவத்தில் குறித்த இலத்திரனியல் தொடர்பாடல் செயன்முறையில் அனுப்புபவர் செய்தி ஊடகம் பெறுபவர் துலங்கல் மீள விலியுறுத்தல் ஆகியவற்றிற்கு உதாரணம் தருக.

(8புள்ளிகள்)

04.i. அ. பொறுப்புக்கள் என்றால் என்ன?
ஆ. காசேட்டின் இரட்டைத் தொழிற்பாட்டினைத் தருக?

ii. பின்வரும் கூற்றுக்கள் உண்மையா பொய்யா எனக்கூறுக?
அ. பங்குடமையின் பங்காளரின் உச்ச எல்லையினை வியாபார பெயர்கள் கட்டளைச்சட்டம் வரையறுக்கின்றது.
ஆ. மீள் விற்பனை பொருட்கள் கடனுக்கு விற்பனை செய்யும் போது பதியும் மூலப் பதிவேடு விற்பனை தினசேரி ஆகும்.
இ. வங்கியில் நடைமுறைக்கணக்கு வைத்திருக்கும் வாடிக்கையாளர்களுக்கு மட்டுமே மேலதிக பற்று வசதி வழங்கப்படும்.
ஈ. அரசு கூடிய வட்டி வீதத்தில் கடன் முறைகளை அறிமுகப்படுத்துவதானது ஒரு வணிகத்திற்கு வாய்ப்பானது.

iii. அகிலன் எனும் நடைமுறைக்கணக்கு உரிமையாளர் சீலன் என்பவரிடம் கடன் கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவாக 50000 ரூபா பெறுமதியான காசோலை ஒன்றினை வழங்கியிருந்தார்
அ. மேற்படி சம்பவத்தின் படி காசோலையினை புறக்குறிப்பிடும் போது காசோலையின் பின்புறத்தில் கையொப்பம் இடவேண்டிய அல்லது பெயரைக் குறிப்பிட வேண்டிய நபர் யார்.
ஆ. மேற்படி காசோலையினை அதிஉச்சப்பாதுகாப்பான காசோலையாக மாற்றவேண்டும் எனின் யாது செய்ய வேண்டும்.

iv. கோமளா ரூபா 50000 ற்கான சேமிப்பு வைப்பொன்றும் சுரேனுக்கு ரூபா 30000 இற்கான நிலையான வைப்பொன்றும் விதுரனுக்கு ரூபா 20000 இற்கான பங்குச்சந்தை முதலீடும் உள்ளது.
அ. மேற்குறித்த கூற்றில் குறிப்பிடப்பட்ட மூவரில் இடர் நட்டம் கூடிய முதலீட்டினைச் செய்துள்ளவர் யார்?
ஆ. “கோமளாவின் எதிர்பார்க்கப்படும் அனுகூலசதவீதம் விதுரனின் எதிர்பார்க்கப்படும் அனுகூல சதவீதத்தை விட அதிகமாக காணப்பட வேண்டும்”. நீர் இக்கூற்றுடன் இணங்குகின்றீரா? உமது விடைக்கான காரணம் ஒன்றை குறிப்பிடுக.

(8 புள்ளிகள்)

## பகுதி – II
## கணக்கீடு
**இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.**

05. i. அ. வங்கி மேலதிகப்பற்று என்பதால் கருதப்படுவது யாது?
ஆ. கணிணி மயப்படுத்தப்பட்ட கணக்கீட்டின் அனுகூலங்கள் 2 தருக.

ii. பின்வரும் கொடுக்கல் வாங்கல்களுக்கான இரட்டைப்பதிவினை எழுதுக.
அ. கடன்படுனரான வினுசனிடமிருந்து 2000 ரூபா காசோலை பெறப்படல்.
ஆ. தளபாட விற்பனை நிலையம் ஒன்றை நடாத்தும் வினோஜன் ரூபா25000 பெறுமதியானமேசை ஒன்றை தனது சொந்த பயன்பாட்டிற்கு எடுத்திருந்தார்.

iii. சயந்தன் வணிகத்தின் கொடுக்கல்வாங்கல் வணிகத்தின் கணக்கீட்டுச் சமன்பாட்டில் தாக்கம் செலுத்தும் விதம் வருமாறு

| திகதி | கொடுக்கல் வாங்கல் | சொத்துக்கள் | உரிமையாண்மை | பொறுப்புக்கள் |
|---|---|---|---|---|
| 02.08.2019 | 1 | சரக்கிருப்பு + 25000 | | க.கொடு + 25000 |
| 03.08.2019 | 2 | தளபாடம் + 35000<br>காசு - 35000 | | |
| 05.08.2019 | 3 | சரக்கிருப்பு – 15000<br>க.பட்டோர் + 18000 | + இலாபம் 3000 | |
| 10.08.2019 | 4 | காசு - 15000 | பெ.கழிவு + 2000 | க.கொடு - 17000 |

மேலும் 01.08.2019இல் சயந்தன் வணிகத்தின் மொத்த சொத்துக்கள் ரூபா 350000உம் மொத்தப் பொறுப்புக்கள் ரூபா 350000 உம் ஆகும்.
வேண்டப்படுவது
அ. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள 1, 2, 3, 4 கொடுக்கல் வாங்கல்களை பெறுமதிகளுடன் எழுதுக.
ஆ. மேற்குறித்த கொடுக்கல் வாங்கல்களை பதிந்த பின்னர் 10.08.2019இல் உள்ளவாறு வணிகத்தில் அடிப்படைக்கணக்கிட்டுச் சமன்பாட்டை பெறுமதிகளுடன் காட்டுக.

iv. கயூரன் வணிகத்தில் டிசம்பர் மாதத்தில் பெறப்பட்ட சில்லறைக்காசு முற்பணம் ரூபா 2500ஆகும். 2019 டிசம்பர் மாதத்திற்கான சில்லறைக்காசு கொடுப்பனவு பின்வருமாறு

| திகதி | கை.இல | விபரம் | பெறுமதி ரூபா |
|---|---|---|---|
| 05.12.2019 | 01 | தபால் கட்டணம் | 380/- |
| 12.12.2019 | 02 | பிரயாணச் செலவு | 420/- |
| 18.12.2019 | 03 | உபசரிப்புச் செலவு | 520/- |
| 25.12.2019 | 04 | முச்சக்கர வண்டிக்கட்டணம் | 260/- |

வேண்டப்படுவது.
மேற் குறித்த கொடுக்கல் வாங்கல்களை சில்லறைக்காசேட்டில் பதிவு செய்து 31.12.2019இற்கு சில்லறைக்காசேட்டினை சமப்படுத்திக் காட்டுக.

(மொத்தம் 12 புள்ளிகள்)

06. i. அ. சட்ட ஆளுமை என்பதால் கருதப்படுவது யாது?
ஆ. தனியுடமை வணிகமொன்றின் உரிமை மாற்றமடையும் சந்தர்ப்பங்கள் இரண்டினை குறிப்பிடுக.

ii. 2019 மார்ச் மாதத்திற்கான வணிகமொன்றால் தயாரிக்கப்பட்ட கொள்வனவு நாட்குறிப்பேடும் விற்பனை நாட்குறிப்பேடும் கீழே தரப்படுகிறது.

கொள்வனவு நாட்குறிப்பேடு

| திகதி | பட்டியல் இலக்கம் | விபரம் | மொ.தொகை | பே.ப |
|---|---|---|---|---|
| 09.03.2019 | 015 | அபிராஜன் | 4800 ரூபா | |
| 20.03.2019 | 317 | விக்ரம் | 3200 ரூபா | |

விற்பனை நாட்குறிப்பேடு

| திகதி | பட்டியல் இலக்கம் | விபரம் | மொ.தொகை | பே.ப |
|---|---|---|---|---|
| 15.03.2019 | 412 | சாரங்கன் | 5600 ரூபா | |
| 25.03.2019 | 365 | மாலன் | 3500 ரூபா | |

மேற்குறித்த தகவலுக்கமைய 31.03.2019 மாதத்திற்கான இரு நாட்குறிப்பேட்டினையும் பூர்த்தி செய்து காட்டுக.

iii. 31.03.2019 இல் மாதுளன் வணிகத்தின் பரீட்சை மீதி சமப்படவில்லை. வித்தியாசம் காணப்பட்ட 7000 ரூபா தொங்கல் கணக்கு இல் வரவு வைக்கப்பட்டது. பின் பின்வரும் தவறுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

1. மின் கட்டணமீதி ரூபா 2000 பரீட்சை மீதிக்கு கொண்டு செல்லப்படவில்லை
2. கடன் விற்பனை 5000 ரூபா கணக்குகளில் இருமுறை பதியப்பட்டிருந்தது.
3. விற்பனை தினசேரியின் கூட்டுத்தொகை 4000 ரூபாவால் கூடுதலாக கூட்டப்பட்டிருந்தது.
4. தொலைபேசிக்கட்டணம் 1000ரூபா செலுத்தியது காசேட்டில் மட்டும் பதியப்பட்டிருந்தது.

வேண்டப்படுவது.

அ. தவறுகளை திருத்துவதற்கான நாட்குறிப்பேட்டுப்பதிவுகள்
ஆ. தொங்கல் கணக்கு

iv. கீழே காட்டப்பட்டுள்ள மீதிகளைக் கருத்தில் கொண்டு ரதன் வணிகத்தின் 30.06.2019 திகதியிலுள்ள பரீட்சை மீதியைத் தயாரிக்குக.

| | | | |
|---|---|---|---|
| கடன்பட்டோர் | 25000 ரூபா | விற்பனை | 40000 ரூபா |
| வங்கி மேலதிக பற்று | 7000 ரூபா | கொள்வனவு | 24000 ரூபா |
| கொடுத்த கழிவு | 2000 ரூபா | காப்புறுதிக்கட்டணம் | 3000 ரூபா |
| பெற்ற கழிவு | 3000 ரூபா | இயந்திரம் | 60000 ரூபா |
| மூலதனம் | 76000 ரூபா | சம்பளம் | 12000 ரூபா |

07. i. அ. திட்டமிடல் என்பதனால் கருதப்படுவது யாது?

ஆ. சந்தைப்படுத்தல் கலவைக்குரிய உருப்படிகளைப் பெயரிடுக?

ii. பின்வரும் விடயங்களுக்கு இரட்டைப்பதிவு தந்துவங்களைக் குறிப்பிடுக.

அ. சொத்து ஆ. பொறுப்பு

இ. வருமானம் ஈ. செலவு

iii. சிவன் வணிகத்தின் 2019 ஜூன் மாதத்தின் வங்கிக்கணக்கில் அனுகூலமான மீதி 10000 ரூபா ஆகக் காணப்பட்டது. வங்கிக் கூற்று வேறு மீதியினைக் காட்டியது. வேறுபாட்டிற்கான காரணங்கள் பின்வருமாறு.

அ. வைப்பிலிடப்பட்ட பின்வரும் காசோலைகள் 2019.06.30 வரையில் தேறாதவைகளாக இருத்தல்.

காசோலை இலக்கம் 112 ரூபா 5000

காசோலை இலக்கம் 121 ரூபா 6500

ஆ. வழங்கப்பட்ட பின்வரும் காசோலைகள் 30.06.2019 வரையில் வங்கியில் சமர்ப்பிக்கப்படவில்லை.

காசோலை இலக்கம் 160 ரூபா 7 000

காசோலை இலக்கம் 250 ரூபா 4500

இ. நிலையியற் கட்டளைக்கமைய செலுத்திய மின் கட்டணம் 3000 ரூபா வங்கி அறவிட்ட காசோலைப்புத்தக கட்டணம் 150 ரூபா ஆகும்.

வேண்டப்படுவது.

1. சீராக்கிய காசேடு
2. வங்கி கணக்கிணக்க கூற்று

iv. 01.03.2019 செல்லையா வணிகத்தில் பின்வருமாறு மீதிகள் காணப்பட்டன.

| | | |
|---|---|---|
| காசு | 220000 | ரூபா |
| கடன் பட்டோர் | 50000 | ரூபா |
| கடன் கொடுத்தோர் | 62000 | ரூபா |

மார்ச் மாதத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் வருமாறு

02.03.2019 வங்கியில் 20000ரூபா வைப்புச் செய்யப்பட்டு நடைமுறைக்கணக்கொன்று ஆரம்பிக்கப்பட்டது.

05.03.2019 கடன் பட்டோர் ஒருவரிடமிருந்து 410 இலக்கம் கொண்ட 6000 ரூபா பெறுமதியான காசோலை கிடைத்தது.

07.03.2019 விற்பனைக்காக கிடைத்த 512 இலக்கம் கொண்ட 7000ரூபா பெறுமதியான காசோலை அச்சந்தர்ப்பத்திலே வங்கியிடப்பட்டிருந்தது.

15.03.2019 203 இலக்கங்கொண்ட ரூபா 3400 பெறுமதியான காசோலை கடன் கொடுத்தோருக்கு 600 ரூபா கழிவு பெறப்பட்டு செலுத்தப்பட்டது.

20.03.2019 மின்கட்டணத்திற்கு 102 இலக்கம் கொண்ட காசோலை 2100 ரூபா வழங்கப்பட்டது.

23.03.2019 மின்கட்டணத்திற்கு வழங்கப்பட்ட காசோலை 2100 ரூபா மறுக்கப்பட்டது.

25.03.2019 மறுக்கப்பட்ட காசோலைக்கு பதிலாக புதிய காசோலை ஒன்று வழங்கப்பட்டது.

29.03.2019 கடன்பட்டோரிடமிருந்து 175 இலக்கம் கொண்ட ரூபா 6000 பெறுமதியான காசோலை 10% கழிவு அனுமதிக்கப்பட்டு பெறப்பட்டது. அச்சந்தர்ப்பத்தில் வங்கியில் வைப்பிலிடப்பட்டது.

வேண்டப்படுவது.

i. வங்கிக் கணக்கு (கழிவுடன் கூடிய)

ii. காசுக்கணக்கு

iii. ஏனைய பேரேட்டுக்கணக்குகள்